Annual Subscription Rs.100/-
திருமறை ஆசான்
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 37 இதழ் - 2 பிப்ரவரி - 2024
தனிப்பிரதி
ரூ.10/-

ஜெபியுங்கள் ! பங்குபெறுங்கள் !!

24 -ஆம்
வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

"திருமறை தியானம்" தொலைக்காட்சி நேயர்கள்
& "திருமறை ஆசான்" வாசகர் கருத்தரங்கம்

இடம் :

YMCA வளாகம், ஏலகிரி மலை.

(வேலூர் மாவட்டம்)

ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார்பேட்டை சந்திப்பிலிருந்து சுமார் 22 கி.மீ.
திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.

நாள் : மே, 6, 7, 8 - 2024

(திங்கள், செவ்வாய், புதன்)

ஆசானின் அறிவுரையிலே ...

1. நிறுவன ஆசிரியர் உரை 3
2. வேதாகமக் கல்வி 9
3. பெண்கள் பகுதி 14
4. வாலிபர் பகுதி 17
5. சிறுவர் பகுதி 22
6. போராட்டக்காரன் யாக்கோபு 23
7. ஆவியின்படி நடந்தால்... 27
8. ஒருவனும் உன்னை அசட்டை... 30

- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 37 Feb - 2024 Issue - 2

நிறுவன ஆசிரியர் உரை

நீங்களே தீர்ப்பளியுங்கள்

தற்காலத்தில் செய்தித் தாள்களைத் திறந்தால் முதலில் நம்முடைய கண்களில் படுவது **கட்சியில் பிளவு** கட்சியை உடைக்கக் கோடிக்கணக்கான பணம் கைமாறியது என்பன போன்ற செய்திகள் தான். இது ஏதோ புதுமை என்று திகைக்காதீர்கள். சாத்தான் நீண்ட நாட்களாகவே இப்போர் முறையை பயன்படுத்தி இயேசுகிறிஸ்து தம் சொந்த இரத்தத்தைச் சிந்திக் கட்டிய (மத் 16: 18) தம் சரீரமாகிய சபையை சின்னாபின்னப்படுத்தி மகிழ்ந்து கொண்டிருக்கிறான். அதன் சிறப்பு அம்சம் என்னவென்றால் அவர் பெயரால் இயங்குகின்ற ஸ்தாபனங்களையும் நபர்களையும் கொண்டே இந்தக் கைங்காரியத்தை இலாவகமாகச் செய்து விடுகிறான்.

அநீதத்தின் கூலிக்கு ஆசைப்பட்டு மோசம் போன இந்த நபர்கள் அப்போஸ்தலருடைய உபதேசங்களைத் திரித்தும், சிதைத்தும், நீட்டியும், குறுக்கியும் மக்களுக்கு விநியோகித்து குழப்பமுண்டாக்குகிறார்கள். அவைகளில் சிலவற்றை உங்கள் முன்வைக்கிறோம். நீங்களே தீர்ப்பு கூறுங்கள்.

அற்புத அடையாளங்கள் நடைபெற்றன என்று கூறும் அதே வேதாகமம், அது ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் முடிந்து போயிற்று என்றும் கூறுகிறது. அற்புத அடையாளங்கள் நடைபெற்றன என்று ஒருவர் விசுவாசிப்பாரானால், அது முடிந்து போயிற்று என்று கூறுவதையும் விசுவாசிக்க வேண்டும் அல்லவா?

தேவன் தம் நோக்கத்தை நிறைவேற்றவும், தேவைப்படும் போதும் அற்புதங்கள் செய்கிறார். நோக்கமும் தேவையும் முடிந்த பின்னர் இயற்கைச் சட்டத்துக்கு அவைகளை ஒப்புக்கொடுத்து விடுகிறார்.

1. தேவன் முதல் மனிதனாகிய ஆதாமை மட்டுமே அற்புதமாகப் படைத்தார். ஆனால், அதற்கு அடுத்து வந்த மனிதர் அனைவருமே இயற்கை விதிகளுக்குட்பட்டே பிறந்து வளர்ந்தனர். உங்களையே

எடுத்துக் கொள்ளுங்களேன்! உங்கள் சரீரம் அற்புதமாகப் படைக்கப் பட்டதா? இல்லை தானே! அதேபோல்தான் தேவன் ஒரு காரியத்தின் ஆரம்பத்தில் செய்த அற்புதத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிராமல் இயற்கை விதிகளுக்கு ஒப்புக்கொடுத்து விடுகிறார்.

2. பரிசுத்த வேதாகமம் அற்புதமாய் எழுதப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் துணை கொண்டு பரிசுத்த மனிதர்கள் வேதாகமத்தை அற்புதமாய் எழுதினார்கள். [II பேதுரு 1: 21.] தாங்கள் ஒரு போதும் கற்றறியாத மொழிகளில் பிரசங்கித்தார்கள்; தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். [அப் 2:4] ஆனால், பரிசுத்த வேதாகமம் முழுமையாக எழுதப்பட்ட பிறகு அற்புதமான முறைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. ஏனெனில், தேவன் மனிதர்களுக்கு அளிக்க வேண்டிய அருட்செய்திகள் அனைத்தையும் பரிசுத்த வேதாகமத்தில் பொறிக்கப்பட்ட பிறகு அற்புதமான முறைகள் தேவைப்படவில்லை. [வெளி 22: 18–19; யாக் 1:25] இப்பொழுது நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் முழுமையாய் எழுதி முடிக்கப்பட்ட வேதாகமத்திலிருந்து தேவனுடைய அருட்செய்திகளை மக்களுக்குப் போதித்து வருகின்றனர்.

ஆனால், ஒரு சிலர், தேவன் தங்களுக்கு புதிய புதிய வெளிப் பாடுகளை கொடுக்கிறார் என்று தங்கள் அபிப்பிராயங்களுக்கு தேவ வாக்கு என்னும் சாயத்தைப் பூசி பாமர மக்களை ஏமாற்றுகின்றனர். ஒருநாள் ஒரு நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த ஒரு நண்பர் நரிக்கொம்பு வியாபாரம் செய்து கொண்டு இருந்தார். நரிக்குக் கொம்பு இருக்கிறதா என்பது முதல் கேள்வி. இரண்டாவது இத்தனை கொம்புகள் எப்படிக் கிடைத்தன என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், அனுபவப்பட்ட [?] ஒருவர் நரிப்பல்லுக்குப் பசை போட்டு சில முடிகளைச் சுற்றிலும் ஒட்டி ஏமாற்றுகிறான் என்று உண்மையை உடைத்தார். அந்த ஆள் அவரை முறைத்துப் பார்த்து விட்டு நைசாக நழுவிவிட்டான். இந்தப் புதிய வெளிப்பாட்டுக்காரர்களைப் பார்த்தால் அவனுடைய ஞாபகம் தான் வருகிறது. இவைகளையெல்லாம் தெரிந்துதான் தேவன் கூட்டாதே, குறைக்காதே என்றும் [வெளி 22: 18,19] வானத்திலிருந்து வந்த தூதனாயினும் சரி. அவன் சபிக்கப்பட்டவன் என்று ஒன்றுக்கு இரண்டுமுறை சொல்லுகிறாரே? [கலா 1: 6–9].

3. வனாந்தர யாத்திரையின் போது, நாற்பது ஆண்டு காலமாக இஸ்ரவேல் மக்கள் மன்னாவை ஆகாரமாகப் புசித்து வந்தார்கள். [யாத் 16:35] ஆனால், அவர்கள் கானான் தேசத்துக்கு வந்து விவசாயம் செய்து முதல் பலனைப் புசிக்கத் துவங்கிய மறுநாளிலே மன்னா பெய்வது நின்றுவிட்டது [யோசுவா 5 12] அவர்கள் இயற்கை நியதிக்குட்பட்டு உழைத்து விளைவித்து உண்டனர்.

4. பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மேல் வந்த பொழுது புறா வடிவில் வந்தார். [யோவான் 1: 32–34] அவர் தான் தேவகுமாரன் என்றும் அவரே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறவர்

என்றும் யோவான் ஸ்நானகனுக்குத் தெரிவிக்கவும் அது அவ்வாறு நடந்தது என்று வேதாகமம் கூறுகிறது. அந்த நோக்கம் நிறைவேறின பின்பு வேறு எவருக்கும், ஒரு போதும் அப்படிப்பட்ட முறையில் பரிசுத்த ஆவி அருளப்படவில்லை.

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது இறங்கினதைப் போல என்மீதும் இறங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது விவேகமாகாது.

அப்போஸ்தலருக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட சில வாக்குத் தத்தங்கள் எனக்கும் மற்றும் இந்நாட்களில் வாழும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும் என்று வாதிடுவது அறியாமை. அவர்கள் வேதகாமத்தில் உள்ள அனைத்து உண்மைகளை எழுதுவதற்கான கட்டளை பெற்றிருந்தார்கள் [யோவா 16: 13] அவர்களுக்குக் கட்டுவதற்கான அதிகாரம் கட்டவிழ்ப்பதற்கான அதிகாரம் கூட உண்டு. [மத் 18: 18] தேவன் சபையில் முதலாவதாக அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினார் [1 கொரி 12:28] அப்போஸ்தலர்கள் சபையின் அஸ்திபாரங்கள் [எபே 2:20], அப்படி நாம் எல்லோருமே அஸ்திபாரங்களா? இல்லையே. அப்படியிருக்க அப்போஸ்தலருக்குச் சிறப்பாகக் கொடுக்கப்பட்ட சில அதிகாரங்கள் உரிமைகள் எனக்கும் ஏன் இருக்கக்கூடாது என்று வாதிடுவது பொருந்துமா? அக்கினிமயமான நாவுகள் போன்ற நாவுகள் அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவர் மீதும் அமர்ந்தனவே [அப். 2: 31. அதை தேவன் அவர்களுக்கு ஒரு நோக்கத்துக்காகக் கொடுத்தார் [மாற்கு 16 : 20] நாம் அதை இச்சித்து, தேவனுக்கு எரிச்சல் உண்டாக்கக்கூடாது.

அப்படியானால் இன்றும் அற்புத அடையாளங்கள் நடக்கிறது என்று கூறுகிறார்களே, அது எப்படி?

சாத்தான் பொய்யான அற்புதங்களைச் செய்து ஏமாற்றுவான்.

11 தெச 2 : 9 –12ல் சாத்தான் வல்லமையோடும், பொய்யான அற்புதங்களோடும் வருவான் என்று எச்சரிக்கிறது. சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற் போனபடியால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்குள் அனுப்புவார் என்று கூறுகிறது. மேலும் வெளி 13:13–ல் அன்றியும் அது மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப் பண்ணத்தக்கதாக பெரிய அற்புதங்களை நடப்பிப்பார்கள் என்று கூறுகிறது. மத் 7: 22ல் கூட இக்கள்ளத் தீர்க்கதரிசிகள், உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புத அடையாளங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள் என்றும் அவர்களை ஆண்டவர் **அக்கிரமச் செய்கைக்காரரே** என்று பட்டம் சூட்டி

விரட்டித் துரத்திவிடுவார் என்றும் வாசிக்கிறோம். II கொரி 11: 13 – 15 வசனப்பகுதியில் அப்படிப்பட்ட வர்களை கள்ள அப்போஸ்தலர்கள் கபடள்ள வேலையாட்கள்; கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல. சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே. அவர்கள் முடிவு அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக இருக்கும் என்கிறது.

அப்படியானால், அசலையும் போலியையும் எவ்வாறு அடையாளம் கண்டு கொள்வது? சோதித்துப் பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும் என்று வேதாகமம் ஆலோசனை கூறுகிறது. 1 யோவான் 4: 1ல் பிரியமானவர்களே, உலகத்தில் அநேக கள்ள தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று 'சோதித்தறியுங்கள்' என்று கூறுகிற அறிவுரையின்படி அவர்களைச் சோதித்துப் பார்ப்பதே சிறந்த வழி. ஆறாம் வசனத்தில் அப்போஸ்தலர்கள் தேவனுடையவர்கள் என்றும், தாங்கள் எழுதிவைத்துள்ள வைகள் தேவனுடைய வசனங்கள் என்றும் தேவனை அறிந்தவன் தங்களுக்குச் செவிகொடுக்கிறான். எனவே இதனாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம் என்றும் கூறுகிறது.

தற்காலத்தில் செய்யப்படும் அற்புத அடையாளங்கள் வேதாகம அற்புத அடையாளங்களைப் போல தெளிவும் திட்டமாகவும் இல்லை.

அப் 2:6, 8–ல் பேசப்படுகிற அந்நிய மொழிகள் உண்மையாகவே ஒரு குறிப்பிட்ட மொழி என்று தெரிகிறது. அதை பவுலும் உறுதி செய்கிறார் (I கொரி 14: 10). ஆனால், தற்காலத்தில் அந்நிய பாஷை என்ற பெயரில் தத்துபித்து என்று உளறிக்கொண்டு, ஆவேசம் வந்தவர்கள் போல் உடம்பை அலட்டிக் கொண்டு, கூச்சல் போடுகின்றனர். 1 கொரி 14:19–ல் அந்நிய பாஷைகளைப் பேசுவதைப் பார்க்கிலும் மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுவது சிறந்தது என்று பவுல் கூறுகிறார். ஆனால் தற்காலத்தில் அந்நிய பாஷை பேசுகிறோம் என்று சொல்லுபவர்கள் உளறலில் பெருமை பாராட்டுகிறார்கள். I யோவான் 4:6–ன்படி அவர்கள் வஞ்சக ஆவியினால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. தயவு செய்து அவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களுக்காகவும் கிறிஸ்து மரித்தாரே.

அதேபோன்று தற்கால தெய்வீக சுகம் என்பதும் வெறும் விளம்பரமே.

அப் 3:2 ல் சொல்லப்பட்டிருக்கிற முடவன், யாராலும் சுகப்படுத்த முடியாத அளவுக்கு பிறவியிலேயே முடவன். அவனைப் பேதுருவும், யோவானும், அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே

சுகமாக்கினார்கள். அவனும் நடந்து குதித்துக் குதித்து நடந்து பார்ப்பவர்களை பிரமிக்க வைக்கிறான். தற்காலத்தில் தெய்வீக சுகம் கொடுக்கிறோம் என்று கூறும் நபர்கள் வியாதி இருக்கிறதா? இல்லையா? என்று மக்கள் புரிந்து கொள்ள முடியாத சந்தேகக் கேசுகளைத் தெரிந்து கொண்டு, பழைய ஏற்பாட்டுப் பாகால் தீர்க்கதரிசிகளைப் போல் ஆட்டம் போட்டு, கூச்சல் பண்ணிக் கும்மாளம் அடித்து, ரகளை பண்ணி புறவினத்தார் கிறிஸ்துமேலே கொண்டிருக்கிற கொஞ்சம் நஞ்சம் மரியாதையையும் கெடுத்து. வருகிறார்கள். அப்போஸ்தலர்கள் வியாதிகளைச் சுகப்படுத்தின பொழுது எதிரிகள் கூட மறுத்துப் பேசமுடியவில்லை [அப். 4: 16] என்பதை. வாசித்துப் பார்த்து இவர்களை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

மேலும் அப்போஸ்தலர்கள் தங்களிடத்தில் கொண்டு வரப்பட்ட அனைத்து நோயாளிகளையும் சுகப்படுத்தினார்கள். [அப் 5:6] ஆனால், தற்காலத்தில் இந்தப் பேர்வழிகள் கும்பகோணத்தில் கூட்டம் போட்டுக் கோயமுத்தூரில் சுகமடைந்தவர்களைப் பற்றிச் சொல்லுவார்கள்:

சேலத்தில் கூட்டம் போட்டு செங்கல்பட்டில் சுகமடைந்தவர்களின் பட்டியலை வாசிப்பார்கள். பல கூட்டங்களுக்கு வந்து கொண்டேயிருக்கிறேன்; எனக்கு இன்னும் சுகம் கிடைக்கவில்லையே' என்று ஏக்கத்தோடு கேட்கும் ஏழையைப் பார்த்து, 'உனக்கு விசுவாசம் இல்லை, அதனால் சுகம் கிடைக்கவில்லை' என்று பழிபோட்டு விடுவார்கள் அல்லது மெல்லத்தான் சுகம் ஆகும் என்று மழுப்புவார்கள். எங்கள் பாஸ்டருக்கு, ஆண்டவர் டெலிபோன் பேசுவார். அது வரையிலும் நீ உபவாசம் இருந்து ஜெபம் பண்ணு; சுகம் கிடைத்தால் எங்கள் பத்திரிகையில் சாட்சி எழுதுவேன் என்று பொருத்தனை பண்ணிக்கொள் என்று பேரம் பேசுவார்கள். பிரேதக்குழியில் கிடந்த லாசருக்கு எந்த விசுவாசம் இருந்தது? என்று கேட்கத் தெரியாத அப்பாவி மக்களிடம் தானே, இவர்கள் வியாபாரம் எல்லாம் [யோவான் 11:39-44]. நாங்கள் அப்போஸ்தலர்களைவிட ஒன்றும் குறைந்தவர்கள் இல்லை என்று வீராப்புப் பேசும் இந்த நண்பர்கள் அப்போஸ்தலர்களைப் போல மரித்தவர்களை எழுப்புவார்களா? [அப் 20:10, 12] கொடிய விஷ ஜந்து தீண்டினாலும் மரிக்காமல் இருப்பார்களா? [அப் 28:3-6] நீர் மேல் நடப்பார்களா? [மத் 14:29] மாட்டார்கள். ஏனெனில், அவர்களால் முடியாது. ஏன் முடியவில்லை? ஏனெனில், அவைகள் என்ன நோக்கத்துக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது [மாற்கு 16:20] இனிமேல் 20 நூற்றாண்டுக்கு பிறகு இவர்கள் எதை உறுதி செய்ய இப்படி அலட்டிக் கொள்கிறார்களோ தெரியவில்லை. அப்படிப்பட்ட மக்களைக் கண்டால் வெறுத்து ஒதுக்காதீர்கள். அது அவர்களுடைய குற்றமன்று; அந்த பொல்லாத பிசாசு தேவனுக்கும் மனுஷனுக்கும் சத்துரு, அவர்களுடைய – கருத்தைக் குருடாக்கிவிட்டான். II கொரி 4 : 4]

அவர்களுக்கு பிரகாசமான மனக்கண்களைக் கொடுக்கும்படி பிதாவினிடம் வேண்டிக் கொள்ளுங்கள் (எபே 1:19).

E.Z. செல்வநாயகம்

திருமறை ஆசான் இதழின் நிறுவன ஆசிரியர் பக்திமிகு **எ.ச. செல்வநாயகம்** ஐயா அவர்கள் மறைந்து 31 ஆண்டுகள் நிறைவடைகிறது. அவர் நினைவாக அவர் எழுதின இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

– ஆசிரியர்

✝

ஏன் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய வேண்டும்?

- ஏனென்றால், ஆதிக்கிறிஸ்தவர்கள் ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களாயிருந்தார்கள் (அப்போஸ்தலர் 8)
- ஏனென்றால், எல்லோருமே தனிநபர் சுவிசேஷகர்களாயிருக்க வேண்டுமென்று கட்டளைப் பெற்றிருக்கிறார்கள் (மத்தேயு 28:19)
- ஏனென்றால், நாமெல்லோரும் சுவிசேஷத்திற்குக் கடனாளிகளாயிருக்கிறோம் (ரோமர் 1:14 – 17)
- ஏனென்றால், ஆத்தும ஆதாயம் நம்மை நாமே காத்துக்கொள்ள உதவுகிறது (மத்தேயு 25:14 – 26).

வேதாகமக் கல்வி

J.C. Choate

புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ள ஆராதனையின் ஐந்து செயல்களில் வேதாகமக் கல்வியும் ஒன்று. அது நமக்குக் கட்டளையாக இருப்பது மட்டுமல்லாமல், ஆதிக் கிறிஸ்தவர்கள் கர்த்தரை ஆராதிக்கும்படி கூடும்பொழுது. வேதாகமக் கல்வியும் நடைபெற்றதாக முன்னுதாரணம் உண்டு.

வேதாகமக் கல்வியை தனித்தோ கூட்டமாகவோ எந்த நேரத்திலும் நடத்தலாம். ஆனால், ஆராதனையின் ஒரு பகுதியாக ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும் குறிப்பாக அது இடம் பெற வேண்டுமென்பதைப் பற்றி இங்கு நாம் கவனிக்கிறோம்.

வேத வசனங்களைத் தாங்களாகவே படித்துக் கற்றுக் கொள்வதின் மூலமோ, அல்லது தேவனுடைய வார்த்தையை ஒருவர் போதிப்பதைக் கேட்பதின் மூலமோ, ஆராதனையின் இந்தப் பகுதி நிறைவேற்றப்படலாம். துரோவா பட்டணத்துச் சகோதரர்கள் ஆராதனையில் கூடி வந்த சமயத்தில் பவுல் அவர்களுக்குப் போதிப்பதை அப் 20 ; 7ம் வசனத்தில் நாம் பார்க்கிறோம். அப். 17 : 10 – 12 வசனங்களில் நாம் படிக்கிறோம் **உடனே சகோதரர் இராத்திரி காலத்தில் பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார்கள்: அவர்கள் அங்கே சேர்ந்து, யூதருடைய ஜெப ஆலயத்திற்குப் போனார்கள். அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தனர். அதனால், அவர்களில் அநேகம் பேரும் கனம் பொருந்திய கிரேக்கரில் அநேக ஸ்திரீகளும் புருஷர்களும் விசுவாசித்தார்கள்** வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே. என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே‘ என கிறிஸ்து கற்பித்தார். [யோவான் 5:39].

வாலிபப் போதகன் தீமோத்தேயுவை பவுல் உற்சாகப்படுத்தி. **‘நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிருஞ்’’** எனக் கூறினார். [2 தீமோ. 2:15]. ‘**நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்**‘ என கிறிஸ்து கூறினஞ்சார். [மத் 5:6]. மீண்டும் ‘**அவர் பிரதியுத்தரமாக :** மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். [மத் 4:4].

நாம் கற்றுக் கொள்ளுவது மட்டுமல்ல, ஆனால் சரியானதைக் கற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். நாம் கேட்கும் போதனை அல்லது கல்விக்கு இது பொருந்தும். அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார் : '**ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்**' (ரோமர்.10:17). அதாவது, நாம் தவறைக் கேட்க நேரிட்டு, முக்கியமாக, நாம் அதைச் சோதித்துப்பார்க்காவிடில், தவறைத்தான் நாம் விசுவாசிப்போம், என்று அதற்கு அர்த்தம், ஆனால் நாம் சத்தியத்தைக் கேட்டால் சத்தியத்தையே விசுவாசிப்போம்.

தேவன் இன்று நம்மோடு பேசியிருக்கிறார்; அவருடைய குமாரன் இயேசு கிறிஸ்து மூலமாக நம்முடன் அவர் பேசியிருக்கிறார். (எபி. 1:1,2), மறுரூபமான மலையின் மீது இயேசுவைப் பற்றி தேவன் தாமே கூறினார்: '**..இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவி கொடுங்கள் ...**' **(மத். 17:5). என்ற போதிலும் கிறிஸ்து தேவனுடைய வசனத்தைப் பேசினார். 'இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளக் கடவன், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக் கொள்ள மாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது.**' (யோவான் 14:23:24). அதன்பின்னர் இப்படியாக வசனம் குறிப்பிட்டுள்ளது: 'இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீடருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.' (யோவான் 20:30,31). மேலுமாக வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அது பூரணப் பிரமாணமாக இருக்கிறது. (11 தீமோ 3:16,17 ; யாத் 1:25).

மேலே கண்ட உண்மைக்கேற்ப, நாம் கர்த்தருடைய நாளிலே கூடிவந்து, தேவனுடைய வசனத்தை ஏன் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்கு பல காரணங்கள் உள்ளன.

1. அது தேவனுடைய வார்த்தையாக இருப்பதால் நாம் அதை கற்க வேண்டும். (எபி. 13:7: 1 பேதுரு 1:23: எபே. 6:17). கர்த்தர் நம்மை இருளில் வைக்காமல், தமது விருப்பத்தை நமக்கு வெளிப்படுத்தியிருப்பது எவ்வளவு அருமையான காரியம்.

2. தேவனுடைய விருப்பத்தை நாம் முற்றிலும் பூரணமாக அறிந்து கொள்ள விரும்ப வேண்டும். (அப். 13:7) எனவே, நாமேதான் படித்துக் கற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு, கர்த்தரின் விருப்பத்தை நாமே

படித்துக் கற்றுக் கொள்ளக் கூடிய அறிவை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

3. நாம் கற்றுக்கொள்ள விரும்பாவிட்டால் ஏமாற்றப்பட்டு விடுவோம் [எபே. 4:14; எபே 3 : 6; யாக். 1:22]. கிறிஸ்தவம் என்ற பெயரில் பல காரியங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அது உண்மையா இல்லையா என்று நாம் எப்படி அறிவோம்? நாம் கேட்பவற்றை தேவனுடைய வசனத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும். அந்த ஆவிகள் அல்லது போதகர்கள் தேவனால் உண்டானவர்களா, இல்லையா என நாம் சோதித்தறியும்படி யோவான் கூறினார். [யோவான். 4:1]. கர்த்தரின் வசனத்தைத் தொடர்ந்து சோதித்தறியும் ஒருவன் ஏமாந்து போக முடியாது.

4. தேவனுடைய விருப்பத்தை பிறருக்குக் கற்பிக்கக் கூடிய அளவிற்கு நாம் அதைக் கற்றுக்கொள்ள விரும்ப வேண்டும். பவுல் கூறினார்: '**உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலை கொண்டிரு. இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்**' 1 தீமோ. 4:16] ஆதிக் கிறிஸ்தவர்களைப் பற்றி வசனம் கூறுகிறது : '**சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்.**' [அப். 8:4].

நாம் கற்றுக் கொள்ளுவதைத் தொடரும் இச்சந்தர்ப்பத்தில் II தீமோத்தேயு 2: 15ம் வசனத்திற்கு நாம் திரும்பிச் செல்வோம். சத்திய வசனத்தை சரியாகப் பகுத்துணர்ந்து கற்றுக் கொள்ளும் அவசியத்தைப் பற்றி அங்கே பவுல் கூறுகிறார். நமது பாடத்திலும் அவ்வாறே செய்வோம். அதாவது, வேதாகமம், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது என நாம் காண்கிறோம். பழைய ஏற்பாட்டில் பிதாக்களின் சட்டம், மோசேயின் சட்டம் ஆகியவை நம்மைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் அல்ல என்பதையும் நாம் அறிந்து கொள்வோம். புதிய ஏற்பாடு, கிறிஸ்துவின் சட்டத்தை உடையதாக இருக்கிறது. வேறுவிதமாகக் கூறின், பழைய ஏற்பாட்டு பகுதி கிறிஸ்துவின் மரணத்திற்கு முந்திய கால மக்களுக்கான சட்ட நூல். அதனால் தான் ஒன்று பழையதும் மற்றொன்று புதியது என்றும் ஆயிற்று. ஆனால், நாம் எங்கே இருக்கிறோம்? சந்தேகமில்லாமல், சிலுவைக்குப் பிந்திய பக்கத்தில் நாம் வாழ்வதால், புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டபடி கிறிஸ்துவின் சட்டத்தின் கீழ் வாழ்கிறோம். [எபி. 9:16, 17; எபி. 10:9].

அப்படியானால், பழைய ஏற்பாட்டை தேவனுடைய வார்த்தை என்று நாம் ஏற்றுக் கொள்ளுகிறோமா என்ற கேள்வி எழுகிறது. ஆம், என்பதுதான் இதற்கு நிச்சயமான பதில்; என்றபோதிலும், சட்டம் என்ற வகையில் அது நம்மையோ அல்லது வேறு எவரையுமோ இப்போது கட்டுப்படுத்துவதில்லை. அப்படியானால் நாம் ஏன் பழைய ஏற்பாட்டைக் கற்றுக் கொள்ள வேண்டும்? கீழே காணும் பல

காரணங்களுக்காக நாம் பழைய ஏற்பாட்டைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

1. சகலமும் படைக்கப்பட்டது பற்றியும், எல்லாவற்றின் தொடக்கத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள;

2. மனிதனுடைய சரித்திரத்தையும், தேவன் அவனை நடத்திய விதத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள;

3. நமக்கு முன்னுதாரணமாக அது எழுதப்பட்டிருப்பதாக பவுல் கூறுவதால், [I கொரி. 10:6]. உண்மையில், பல பாடங்களை அது நமக்காக கொண்டுள்ளது.

4. அதில் காணப்படும் கொள்கைகள், அது அளிக்கப்பட்ட நாளில் இருந்தது போலவே இன்றும் உண்மையாக இருப்பினும், அது நமக்குச் சட்டம் அல்ல.

5. நாம் இப்போது ஒரு மேலான சட்டத்தின் கீழ் வாழ்ந்து வருவதையும், இதில் மகத்தான நம்பிக்கை நமக்கு உள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ளவும் [யோவான் 1:17].

தேவனுடைய வசனத்தை மிகவும் சிறப்புடன் நாம் கற்றுக் கொள்ள உதவியாகவும், அவற்றைச் சரியாக பகுத்து உணரவும். நமது வேதாகமக் கல்விக்கு பயன்படும் சில விதிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. பாடத்தைப் பல முறை படித்தல்.

2. சந்தர்ப்பத்தை கவனித்துப் படித்தல்

3. பேசுகிறவர் யார்?

4. யாரிடம் அவர் பேசுகிறார்?

5. எப்போது அது பேசப்பட்டது?

6.அது மறைபொருளாகவா அல்லது நேரிடையாகவா?

7. அது ஒரு கட்டளையா?

8. நமது இரட்சிப்புக்கு அது சம்பந்தப்பட்டதா?

மேலும், கீழ்க்கண்ட உபகரணங்களும் உங்கள் வேதாகமக் கல்விக்குப் பயன்படும் : வித்தியாசப்பட்ட மொழியாக்கங்கள், ஒரு வேதாகம அகராதி, ஒரு வேதாகம ஒத்த வாக்கிய புத்தகம், விளக்கவுரை நூல்கள் போன்றவை. என்றாலும், இவை அனைத்திற்கும் மேலாக, ஜெபத்துடன் உங்கள் வேதாகமத்தையே படியுங்கள். கற்றுக் கொள்ளுங்கள். வேதாகமத்தைப் பற்றி பலருக்கு நிறைய விஷயங்கள் தெரியும். ஆனால், வசனங்களின் அர்த்தம் தெரியாது.

கர்த்தர் நம்மிடம் கேட்டுக் கொள்ளுவது போல, நீங்களும் நானும் செய்யும் போதும், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும் பரிசுத்தவான்களோடு கற்றுக்கொள்ள கூடி வரும் போதும், நாம் கிறிஸ்தவர்களாக வளரவும், விருத்தியடைவும் உதவும் வேதாகம அறிவு நமக்குக் கிடைக்கும். எல்லாரும் இவ்விதமாகச் செய்தால், பின்னர் சபையானது வலிமையுடையதாக இருக்கும். தேவனுடைய வார்த்தையே நம்மை இரட்சிக்கிறது என்று அறிந்துகொள்வ தோடல்லாமல், நம்மை ஒற்றுமையாக்குகிறது. என்றும், ஒருவேளை நமது மத நண்பர்களையும் அவைகளை ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியும்.

சுவிசேஷம் பூரணமானது

- பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்டது. (யோவான் 14 அதி. 16 அதி)
- ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் உள்ளடக்கியது. (II பேதுரு 1 : 3)
- நம்மை கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். (யோவான் 12 : 48)
- குறைவற்றது ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது. (சங் 19 : 7)
- கூட்டவும், குறைக்கவும் அவசியமில்லாதது. (வெளி 22 : 18, 19)
- இரட்சிப்பை தரத்தக்கது. (ரோமர் 1 : 14 – 16)
- ஒரு போதும் ஒழிந்து போகாதது. (மத். 5 : 18)



பொக்கிஷம்

sis. ரேச்சல் ராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே ! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஸ்தோத்திரங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொக்கிஷம் என்றாலே விலை மதிக்க முடியாத ஒன்று. இயேசு கிறிஸ்து ஒரு முறை சொல்லும் போது, 'உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் என்கிறார். மனிதர்களின் பொதுவான குணமே, விலையுயர்ந்த ஒன்று என்றால் அதில்மேல் நாட்டம், அதை பெற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணம், அதையே நினைத்துக் கொண்டிருப்பதும் இயல்பானது தான். நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த நாட்களில் பல உவமைகளைக் கூறி பரத்துக்கடுத்த காரியங்களை எளிமையாக மக்கள் புரியும்படி செய்வார். அப்படி அவர் சொன்ன உவமைகளில் மத்தேயு. 13:44 –ல், ' அன்றியும் பரலோக ராஜ்ஜியம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்' என்று கூறுகிறார்.

பொக்கிஷத்தைக் கண்டவுடனே ஒரு மனுஷனுடைய செயல்பாட்டைப் பாருங்கள்! தான் அதை அடைந்து விட வேண்டும், தனக்கு அது சொந்தமாக வேண்டும், அது தன்னுடையதாக வேண்டுமென்றால் என்னென்ன முயற்சி எடுக்க வேண்டுமோ அதையெல்லாம் எடுத்து சொந்தமாக்கிக் கொள்கிறான். இந்த இடத்திலோ நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து பொக்கிஷம் என்பது பரலோக ராஜ்ஜியம் என்று கூறுகிறார். சரி பரலோக ராஜ்ஜியம் என்பது சபையை குறிக்கும் ஒரு வார்த்தை. இதற்கு நிறைய வசன ஆதாரங்கள் வேதாகமத்தில் உள்ளன. மத்தேயு. 4:17; யோவான் 3:5; மத்தேயு. 10:7; யோவான் 18:36; தானி. 2:44; 1 கொரி. 15:50; மாற்கு 14:25; மாற்கு 9:1; லூக்கா 17:21 இன்னும் பல வசனங்கள் உள்ளன. எல்லா வசனங்களும் சபையை குறிக்கும் வசனங்கள். தேவன் இயேசுவை பூமிக்கு அனுப்பினதின் பிரதான நோக்கமே சபையை ஸ்தாபிப்பதற்குத்தான். இந்த சபைதான் பொக்கிஷமாகச் சொல்லப்படுகிறது. மத்தேயு. 16:18–ல், பேதுருவிடம் இயேசு சொல்லும்போது 'இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்' என்று சொல்லுகிறார்.

இயேசு சபைக்காக வந்தார், சபைக்காக மரித்தார், சபைக்காக உயிரோடு எழுந்தார், சபைக்காகத்தான் மீண்டும் வருவார். எனவே,

சபை என்பது தேவனின் அனாதி திட்டம். அதுவும் கிறிஸ்து தன் சொந்த இரத்தத்தைச் சிந் சம்பாதித்தது இந்த சபை. எனவே, அதற்கு கிறிஸ்துவின் சபை என்ற பெயர் வழங்கலாயிற்று. கிறிஸ்துவின் சபைதான் பொக்கிஷம்.

அருமையான சகோதரிகளே! தேவனுடைய கிருபையினாலே இந்த மாபெரும் பொக்கிஷமாகிய சபைக்குள்ளாக நம்மில் அநேகர் இருக்கிறோம். எத்தனை பேர் இதை விலையேறப் பெற்ற ஒன்றாக நினைக்கிறோம் ? மற்ற பிரிவினை கூட்டத்தைப் போல இதுவும் ஒன்று என்று எண்ணுகிறோமா ? பொக்கிஷத்தினால் உண்டான சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். நம்மில் அநேகருக்கு சபையை குறித்தான சந்தோஷமே இல்லையே ! ஏற்றுக்கொண்ட உண்மையான ஒரே உபதேசத்தில் பிடிப்பில்லையே.

எதை விட்டு சபைக்குள் வந்தோமோ அதை மறந்து விட்டு வந்ததையே நினைத்து, அவ்வப்போது அதையும் செய்து இதையும் செய்கிறவர்களாக இருக்கிறோமே!

மத்தேயு. 6:33–ல், 'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்' என்று வாசிக்கிறோம். நாம் இதை விட்டுவிட்டு என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்றே கவலைப்பட்டு காலத்தை வீணடிக்கிறவர்களாயிருக்கிறோம், இவைகளெல்லாம் நமக்கு வேண்டியவைகள் என்று நம் பரமபிதா அறிந்திருக்கிறார்.

சரி, ராஜ்யத்தைத் தேடுதல் என்றால் என்ன ? ராஜ்யம் என்றாலும் சபை என்றாலும் ஒன்றுதான். நம் சொந்த ஆசைகள், திட்டங்கள், உறவுகள், சுகம், உடமைகள் என்று இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் சபைக்கு முதலிடம் அல்லது முன்னுரிமை கொடுக்க வேண்டும். அப்போஸ்தலர் பவுல் சொன்னது போல் கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன் என்று பிலி. 3:11 –ல் கூறினபடி நாம் சொல்ல பழகிக் கொள்ள வேண்டும்.

சபையில் உள்ள அனைவரும் உபதேசத்தில் சரியாக இருக்கிறார்களா ? என்று கவனிக்க வேண்டும். நாம் சரியாக இருக்க வேண்டும். வேத ஆராய்ச்சி மிகவும் அவசியம் பெரோயா பட்டணத்து விசுவாசிகளைப் போல, காரியங்கள் இப்படியிருக்கிறதா? என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கிறவர்களாய் இருக்க வேண்டும். அப்போதுதான் தெளிவு கிடைக்கும். தெளிவு இல்லையென்றால் பிசாசு நம்மை ஏமாற்றி விடுவான்.

சபையை நாம் ஏன் பொக்கிஷமாகக் கருத வேண்டுமென்றால் அதற்கு கொடுத்த விலை ஈடு, இணையில்லாதது. இயேசு தம் இன்னுயிரைக் கொடுத்து சம்பாதித்தது. அவருடைய இரத்தத்தால்

பாவமன்னிப்பு பெற்று நாம் சபையில் சேர்க்கப்பட்டுள்ளோம். அப். 2:28, மற்றும் 47 ம் வசனங்கள், அருமையானவர்களே ! உலகத்தில் எதை வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால், பாவ மன்னிப்பு ? இயேசுவின் இரத்தம் மட்டுமே கொடுக்க முடியும். பாவத்தோடு இருந்தால் நரக பாதாளந்தான் முடிவு. எனவே, இலவசமாக கிடைத்த இம்மாபெரும் பொக்கிஷமாகிய சபையை முதலாவதாக நம் வாழ்வில் வைக்க வேண்டும்.

இறுதியாக, இம்மாபெரும் பொக்கிஷமாகிய சபைக்காகத்தான் இயேசு கிறிஸ்து மீண்டும் வரப்போகிறார். 1 கொரி. 15:24 –ல் ' அதன் பின்பு முடிவு உண்டாகும்... தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் என்று வாசிக்கிறோம். புரிந்து கொள்வதற்கு மிகவும் எளிமையான உண்மை.

உலகில் இருக்கிற அற்புத அதிசயங்களையோ, கின்னஸ் சாதனைகளையோ அவர் பார்க்க எடுக்க வர மாட்டார். பிதாவும், இயேசுவும் ஆகிய இருவருடைய இலக்கும் ஒன்றே ஒன்றுதான், அது சபை. இந்த கிறிஸ்துவின் சபையை மாத்திரம் கொண்டுபோய் பிதாவிடம் சேர்ப்பார். அப்படியென்றால் சபை எவ்வளவு விசேஷமானது, சபைதான் பொக்கிஷம். சபையில் உள்ள நாம் அதன் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து தகுதியாய் இருப்பது மிகவும் அவசியம். இதற்கேற்றபடி வாழ முயற்சிப்போம். தேவன் உதவி செய்வாராக! ஆமென்!!

அன்பிற்கான ஒரு விளக்கம்

- ஒருவன் காயப்படுத்தும்போது அமைதியாக இருக்கும்.
- சக மனிதர்கள் அவமதிக்கும்போது பொறுமையாக இருக்கும்.
- தன்னைப் பற்றித் தவறானவைகள் வரும்போது தேவனிடம் உண்மையுள்ளதாக இருக்கும்.
- பிறருடைய அபிப்ராயங்களை அலட்சியப்படுத்தாமலிருக்கும்.
- தன்னுடைய சேவைக்கான தேவை வரும்போது அந்த இடத்தில் இருக்கும்.
- பிறர் துயரைத் துடைப்பதில் தைரியமுள்ளதாக இருக்கும்.

வாலிபர் பகுதி

தேவனுடைய பிள்ளைகள் தவறும் போது

Dr. ஏபில் நாயகம்

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர்களே உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். பிரியமானவர்களே இந்த மாதமும் இவ்விதழின் வழியாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாதம் தாவீதைக் குறித்து நாம் பார்க்க இருக்கிறோம்.

இஸ்ரவேல் ஜனங்களின் வரலாற்றில் தாவீது ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறார் என்பது நாம் நன்கு அறிந்ததே. எங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று இஸ்ரவேல் ஜனங்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தேவன் சவுலை இஸ்ரவேலின் முதல் ராஜாவாகத் தெரிந்து கொண்டு, சவுலை அபிஷேகம் செய்தார். ஆனால், அவனின் கீழ்ப்படியாமை என்ற பாவத்தினால் ராஜ்யபாரம் அவனிடத்திலிருந்து எடுக்கப்பட்டு தேவன் தெரிந்து கொண்ட தாசனாகிய தாவீதுக்கு அது கொடுக்கப்பட்டது. இளைஞனாக தாவீது இருந்த பொழுது சாமுவேல் தீர்க்கன் தாவீதை அபிஷேகம் செய்தார்

தாவீது பின்னர் பெலிஸ்தனாகிய கோலியாத்தை வீழ்த்தியதினாலே ஜனங்களின் மத்தியில் அவனுக்கு செல்வாக்கு கிடைக்க தொடங்கியது ஒரு கட்டத்தில் ஜனங்கள் சவுலை விட தாவீதுக்கு அதிகமான கனத்தைக் கொடுக்க ஆரம்பித்தார்கள். ராஜாவாகிய சவுல் தாவீதை தன்னுடைய யுத்தமனுஷரின்மேல் அதிகாரியாக்கினான். தாவீதுக்கு சவுலின் குமாரனாகிய யோனத்தான் மிகவும் நெருங்கிய ஸ்நேகிதனாக இருந்தான். அதுமட்டுமல்ல ராஜாவாகிய சவுலின் குமரத்தியான மீகாளை தாவீது திருமணம் செய்து கொண்டார். தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டதிலிருந்து இதுவரை இப்படியாக குறை இல்லாத வாழ்க்கை தாவீதுக்கு இருந்தது.

ஆனால், ஒரு கட்டத்தில் இவை அனைத்தும் தலைகீழாக மாறியது. தாவீதின் வாழ்க்கை புரட்டிபோடப்பட்டது சவுலின் கண்களுக்கு பிரியமான ஒருவன் என்ற நிலை மாறி அதே சவுல் தன்னை கொன்றுவிடுவானோ என்று பயந்து தன் உயிருக்காக ஓடவேண்டியிருந்தது. தனது ஸ்நேகிதனான யோனத்தானை பிரிய வேண்டிய சூழல் ஏற்பட்டது. சவலின் படைகளுக்கு தலைவன் என்ற நிலை மாறி அதே படைவீரர்கள் தன்னை கொன்று விடுவார்களோ என்று பயந்து ஒளிந்து கொள்ளும் அளவிற்கு தாவீதின் வாழ்க்கை மாறியது. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் தாவீதின் வாழ்க்கை இருந்தாலும் தேவனுக்குப் பயந்து சர்வ வல்லவருக்கு

பிரியமான வாழ்க்கையை தாவீது வாழ்ந்தார் உதாரணமாக ராஜாவாகிய சவுலைக் கொன்றுபோடுவதற்கு வாய்ப்பு இருந்தும் தேவன் அபிஷேகம் பண்ணின ஒரு ராஜாவாக சவுல் இருந்த ஒரே காரணத்தினாலே தாவீது அப்படிச் செய்யாமல் தேவனுடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்து வாழ்ந்தார்.

ஆனால், சவுலின் கைகளுக்குத் தப்பி ஓடிக்கொண்டே இருந்ததால் களைத்துபோன தாவீதுக்கு சோர்வு ஏற்பட்டது. இந்த சோர்வு சரீரத்திலும் ஏற்பட்டது ஆவியிலும் ஏற்பட்டது. இன்னும் எத்தனை காலம் சவலுக்கு தப்பி ஓட வேண்டும்? தேவன் என்னை ராஜாவாக அபிஷேகம் செய்திருக்கிறாரே அது நிறைவேறுமா? சவுல் என்னை கொன்றுபோட்டால் எப்படி நிறைவேறும்? தேவனால் என்னை சவுலின் கைகளிலிருந்து தப்புவிக்க முடியுமா? என்று நினைத்து பயந்து போனதால் தேவன் மீது நம்பிக்கை இழந்தவராக தேவனுடைய வழிநடத்துதலை சந்தேகிப்பவராகக் காணப்பட்டு சவுலினுடைய கைகளுக்கு எப்படி தப்பலாம் என்று தேவனுடைய ஆலோசனையை கேளாமல் **தனக்குள்ளே** யோசனை செய்துகொண்டார். வசனம் இப்படியாக சொல்கிறது. **பின்பு தாவீது: நான் எந்த நாளிலாகிலும் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்; இனிச் சவுல் இஸ்ரவேலின் எல்லைகளில் எங்கேயாவது என்னைக் கண்டுபிடிக்கலாம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகும்படிக்கும், நான் அவன் கைக்கு நீங்கலாயிருக்கும்படிக்கும், நான் பெலிஸ்தரின் தேசத்திற்குப் போய், தப்பித்துக்கொள்வதைப்பார்க்கிலும் நலமான காரியம் வேறில்லை என்று தன் இருதயத்தில் யோசித்தான்** [1சாமுவேல் 27:1].

தாவீதின் வாழ்க்கையில் இதுவரை நடந்திருக்கும் காரியங்களை பார்க்கும்போது நம்மில் பலரை அது சித்தரிக்கிறதாக இருக்கிறது. ஆம், தேவனுடைய கிருபையால் இரட்சிக்கப்பட்டு அவரோடு பயணிக்க தீர்மானம் செய்து, சிலகாலம் சென்ற பின், நாம் விரும்பியவாறு வாழ்க்கை இல்லையே என்று நினைத்து தேவன் மீது உள்ள நம்பிக்கை கொஞ்சம் குறையவும், நம்முடைய யோசனைகள் மீதும் நம்முடைய சாமார்த்தியத்தின் மீதும் நம்பிக்கை அதிகமாகிறது. ஆனால், வாலிபர்களே தாவீதின் இந்த தவறு எவ்வளவு மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது. தாவீது செய்த தவறுகளின் தீவிரத்தை முதலில் நாம் கவனிப்போம்.

தாவீது தனக்குள்ளேயே உரையாடினார் என்று வாசித்தோம். ஆனால், இதுவரைக்கும் தாவீது எப்பொழுதெல்லாம் குழப்பங்களும் பயமும் அடுத்தது என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விகளும் வரும்பொழுது தேவ மனிதர்களிடமும் தேவனிடத்திலும் ஆலோசனை பெற்றுக்கொண்டு அதனடிப்படையில் செயல்படுவதையே வழக்கமாக வைத்திருந்தார். ஆனால், இப்பொழுது தாவீது ஆலோசனைக்காக தன்னிடமே திரும்புகிறார். இதன் விளைவு என்ன? தேவன் மீது இருந்த விசுவாசம் குறைந்துபோனது. தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மீது நம்பிக்கை குறைந்து போனது. அவைகள்

நிறைவேறுமா என்ற சந்தேகம் தாவீதுக்கு வந்தது. தேவன் தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக்குவார் என்று தாவீதுக்கு சொல்லப்பட்டிருந்தது [1 சாமுவேல் 16:1, 12-13] தேவனுடைய வாக்குத்தத்தம் யோனத்தான் மூலம் உறுதியாக்கப்பட்டது [23:17]. பின் அபிகாயில் மூலமாகவும் [25:30-31] ராஜாவான சவுலின் மூலமாகவும் கூட உறுதியாக்கப்பட்டிருந்தது [24:20] அப்படியிருந்தும் தன்னுடைய இருதயத்திலே அவன் யோசனை செய்ய ஆரம்பித்தபோது இவை அனைத்தையும் தாவீது மறந்துவிடுகிறார். அதுமட்டுமல்ல, எதிர்காலத்தில் என்ன நடக்கப்போகிறது என்பதை தன்னுடைய யோசனையால் மாற்றமுடியும் என்று நினைத்தார். முக்காலங்களையும் தேவன் தம்முடைய கரத்தில் வைத்திருக்கிறார் என்பதையும் அதனடிப்படையில் தேவனுடைய வழிநடத்துதல் இருக்கும் என்பதையும் அவன் விசுவாசிக்காமல் தன்னாலே தன் யோசனையினாலே சாதித்துவிட முடியும் என்று நம்பினார்.

சவுல் கைகளுக்குத் தப்பி பாதுகாப்பாக இருப்போம் என்று நினைத்து பெலிஸ்தரின் தேசத்திற்கு ஓடிப்போவது நல்லது என்று தாவீது முடிவு செய்தார். தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட இஸ்ரவேலின் எதிர்கால ராஜா உதவிக்காக தேவனுக்கு எதிரான தேசத்தில் தஞ்சமாக ஓடிப்போவதை கற்பனை செய்து பாருங்கள்! தாவீதின் இதயம் அவனை அப்படி ஒரு சிக்கலில்தான் சிக்க வைத்தது!

நம்முடைய இருதயத்தின் யோசனைகளைக் குறித்து நாம் ஜாக்கிரதை உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால், நம்மால் களையப்பட்ட பழைய மனிதனோடு மீண்டும் ஒரு தொடர்பை ஏற்படுத்தும் அபாயம் இதில் உள்ளது. நம் நண்பர்கள் பலமுறை இப்படியாகக் கூறுவார்கள். நம் மனதுக்கு பிடித்ததை நாம் செய்யவேண்டும், அதுவே நமக்கு சந்தோஷத்தை தரும் என்று. ஆனால், வாலிபர்களே அது எல்லா நேரங்களிலும் சரியல்ல. குறிப்பாக ஆவிக்குரிய பிள்ளைகளாகிய நாம் அப்படிப்பட்ட எண்ணத்தை கைவிடவேண்டும். வேதமும் அப்படித்தானே நம்மை எச்சரிக்கிறது [எரே 17:9, நீதி 28:26, பிரசங்கி 9:3; மாற்கு 7:21-22] **'உங்கள் இதயம் சொல்வதைக் கேளுங்கள்'** என்று யாராவது உங்களிடம் கூறும்போது கூறினால் அது ஆவிக்குரிய அழிவுக்கு வழிவகுக்கும் என்பதை மறக்க வேண்டாம். நம் இருதயத்தில் நலமாய் தோன்றுகிற காரியத்தை நாம் செய்ய முற்படும் போது தாவீதை போல் தேவனுடைய சித்தத்திற்கு எதிரானவர்களாக தேவனுடைய வழிநடத்துதலிலிருந்து விலகினவர்களாக தேவனோடே ஐக்கியம் இல்லாதவர்களாக மாறிவிடுகிறோம்.

நாம் ஒவ்வொருவரும் நம்முடைய சொந்த யோசனையின் அடிப்படையில் செயல்படலாம். ஆனால், அதற்கான விலையை நாம் நிச்சயம் கொடுக்கவேண்டும். இங்கே தாவீது இஸ்ரவேலின் எதிரியாகவும் தேவனுடைய நாமத்தை நிந்தித்த தேசமாகிய பெலிஸ்தரின் தேசத்துக்கு போனார். அங்கிருந்த ராஜாவாகிய

ஆகீஸிடம் போய் சேர்ந்து கொள்கிறார். வசனம் 5 இல் **தாவீது ஆகீசை நோக்கி: உம்முடைய கண்களில் எனக்குத் தயைகிடைக்குமானால், நான் வாசம்பண்ணும்படி நாட்டிலுள்ள ஊர்களிலே ஒன்றில் எனக்கு இடந்தாரும்; உம்முடைய அடியான் உம்மோடேகூட ராஜதானி பட்டணத்திலே வாசமாயிருப்பானேன் என்றான்'.** தேவனிடத்தில் தயை எதிர்பார்க்கவேண்டிய ஒரு நபர் இப்பொழுது தேவனை நிந்தித்த தேசத்தின் ராஜாவினிடத்தில் தயையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்ல இந்த ராஜா இஸ்ரவேலுக்கு எதிராக போர் செய்ய வேண்டும் என்று ஆயத்தமானபோது, தாவீதும் தன்னோடு வரவேண்டும் என்று நிபந்தனை வைத்தான். '**அந்நாட்களிலே பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ண, தங்கள் சேனைகளைப் போருக்குக் கூட்டினார்கள்; அப்பொழுது ஆகீஸ் தாவீதை நோக்கி: நீயும் உன் மனுஷரும் எவ்விதத்திலும் என்னோடேகூட யுத்தத்துக்கு வரவேண்டும் என்று அறியக்கடவாய் என்றான்.** [28:1] தாவீதும் அவன் மனுஷரும் போர் வீரர்களோடு இஸ்ரவேலுக்கு எதிராக போர் செய்ய புறப்பட்டார்கள். இருதயத்தின் யோசனையை விரும்பி அதற்கு செவிகொடுத்த தாவீதின் நிலையை பாருங்கள்; [29:2] நாம் எவ்வளவு புத்திசாலிகளாக இருந்தாலும் சரி, நாம் எவ்வளவு காலம் இரட்சிக்கப்பட்டிருந்தாலும் சரி, தாவீது செய்த தவறை செய்வதற்கு வாய்ப்புள்ளது. எனவே, மிகுந்த கவனம் தேவைப்படுகிறது.

அடுத்ததாக என்ன நடந்தது என்பதை கவனிப்போம். தாவீது இஸ்ரவேலுக்கு எதிரான போரில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருந்த அதே வேளையில் தாவீதின் மனைவிகளும் அவன் பிள்ளைகளும் தாவீதோடிருந்த மனிதர்களின் மனைவிகளும் பிள்ளைகளும் அமலேக்கியரினால் சிறைபிடித்து செல்லப்பட்டார்கள் [30:1,2]. இதினிமித்தம் தாவீதுக்கு துயரம் ஏற்பட்டது. வசனம் இப்படியாக சொல்கிறது **அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள்** [30:4].

ஒரு மனிதனால் எதையெல்லாம் இழக்க முடியுமோ அவை அனைத்தையும் தாவீது இழந்தார். தன்னைச்சுற்றி இருந்த காட்சியை பார்க்கும்போது ஒருவேளை தாவீது நினைத்திருக்கலாம் என்னுடைய இதயத்திலே நான் எடுத்த முடிவு எப்படியாக என்னை பாதித்து இருக்கிறது என்று. நன்றாக கவனித்தால் பாதிப்பு தாவீதுக்கு மட்டும் அல்ல. அவனுடைய குடும்பத்திற்கும் அவரை நம்பி வந்த மனிதர்களுக்கும் அதேவிதமான பாதிப்பு ஏற்பட்டிடுகிறது. நண்பர்களே, நம் முடிவு நம்மை மட்டும் பாதிப்பதில்லை, பிறரையும் பாதிக்கிறது. ஒருவேளை நம்முடைய முடிவு நம் குடும்பத்தில் ஒருவரையோ சபையில் ஒருவரையோ விசுவாசிகளில் ஒருவரையோ பாதித்து அவர்களுக்கு இடறல் உண்டாகலாம்.

இவையனைத்திற்கு பிறகு தாவீது தன் நிலையை உணர்ந்து

பார்த்து எதை செய்யவேண்டுமோ அதை செய்தார். 30.8 **'தாவீது கர்த்தரை நோக்கி: நான் அந்தத் தண்டைப் பின் தொடரவேண்டுமா? அதைப் பிடிப்பேனா? என்று கேட்டான். அதற்கு அவர் அதைப் பின்தொடர்: அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக்கொள்வாய் என்றார்.** தேவனுடைய சித்தத்தையும் உதவியையும் நாட தாவீது கர்த்தரை நோக்கி தனது வாழ்க்கைக்கான தேவ சித்தத்தையும் வழிநடத்துதலைக் கேட்டார். தேவனும் தாவீதுக்கு செவிகொடுத்து அடுத்தது என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறார். தேவனுடைய சித்தம் என்ன என்பதை தாவீது தெரிந்து கொண்டதற்கு பின் அவன் தாமதிக்காமல் அதை நிறைவேற்ற புறப்பட்டார். I யோவான் 1:9 **நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.**

தாவீதின் வாழ்க்கையில் நடந்த இச்சம்பவத்தில் நாம் கற்றுக்கொள்ள அநேக காரியங்கள் உள்ளது. முக்கியமாக நம்முடைய இருதயத்தின் யோசனைகளுக்கும் நம் மனதிற்கு பிரியமான யோசனைகளுக்கும் நாம் விலகி இருக்க வேண்டும். ஒருவேளை தேவனுடைய வழியில் செல்லாமல் அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்காமல் இருப்போமாகில், அதிலிருந்து விலகி, மனம்திரும்பி சர்வ வல்லமையுள்ளவரிடம் நாம் நம்மை ஒப்புக்கொடுப்போம். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

மனிதனை இரட்சிப்பதற்கான தேவனுடைய திட்டம்

- தேவனுடைய கிருபை – எபேசியர் 2 : 8
- கிறிஸ்துவின் இரத்தம் – ரோமர் 5 : 9
- பரிசுத்த ஆவியானவரின் வார்த்தை – II தீமோத்தேயு 3 : 16, 17
- பாவியின் விசுவாசம் – அப்போஸ்தலர் 16 : 31
- பாவியின் அறிக்கை – ரோமர் 10 : 10
- பாவியின் ஞானஸ்நானம் – I பேதுரு 3 : 21
- கிறிஸ்தவனின் கிரியை – யாக்கோபு 2 : 24
- கிறிஸ்தவனின் நம்பிக்கை – ரோமர் 8 : 24
- கிறிஸ்தவனின் நிலைத்து நிற்கும் தன்மை – மத்தேயு 24 : 13

சிறுவர் பகுதி

யோனா

Dr. பிரெய்ஸி

ஹலோ குழந்தைகளே! நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம். எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த மாதம் ஒரு தேவ மனிதனைப் பற்றி பார்ப்போம்.

அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்: நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சகத்தில் வந்து எட்டினது என்றார். அப்பொழுது யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு ஓடிப்போகும்படி எழுந்து, யோப்பாவுக்குப் போய் தர்ஷீசுக்குப் போகிற ஒரு கப்பலைக்கண்டு, கூலிகொடுத்து, தான் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான். கர்த்தர் சமுத்திரத்தின்மேல் பெருங்காற்றை வரவிட்டார்; அதினால் கடலிலே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. அப்பொழுது கப்பற்காரர் பயந்து, அவனவன் தன்தன் தேவனை நோக்கி வேண்டுதல்செய்து, பாரத்தை லேசாக்கும்படிக் கப்பலில் இருந்த சரக்குகளைச் சமுத்திரத்தில் எறிந்துவிட்டார்கள்; யோனாவோவென்றால் கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிபோய்ப் படுத்துக்கொண்டு, அயர்ந்த நித்திரைபண்ணினான். அவர்கள் யார் நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நாமறியும்படிக்குச் சீட்டுப்போடுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு சீட்டுப்போட்டார்கள்; யோனாவின் பேருக்குச் சீட்டு விழுந்தது. பின்பு யோனாவை எடுத்துச் சமுத்திரத்திலே போட்டுவிட்டார்கள்; சமுத்திரம் தன் மும்ரத்தைவிட்டு அமர்ந்தது. யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார்; அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்றுநாள் இருந்தான்.

அன்பு பிள்ளைகளே! பின்னர் என்ன நடந்தது என்பதை யோனா புத்தகத்தில் அடுத்த அதிகாரங்களைப் படிக்கும்போது தெரிந்து கொள்ளலாம். அன்பான குழந்தைகளே, யோவான் நினைத்தது போல கர்த்தருடைய சமுகத்தினின்று நாம் ஒருபோதும் விலக முடியாது. மேலும், தேவனும் அவருடைய வார்த்தைக்கும் எதிராக பாவம் செய்வதால் ஏற்படும் விளைவுகளையும் நாம் சந்திக்க வேண்டியிருக்கும். நாம் மனந்திரும்பினால், அவர் நம்முடைய ஜெபங்களைக் கேட்பார்.

அன்புள்ள குழந்தைகளே, தேவனின் கண்களிலிருந்து உங்களால் தப்ப முடியாது என்பதை உணரும் நேரம் இது. உங்கள் வழிகளைச் சரிசெய்து, யோனாவைப் போல் பரலோகத்திலுள்ள நம் பிதாவிடம் மனந்திரும்புங்கள்.

With love
Praisey akka

போராட்டக்காரன் யாக்கோபு (part II)

சகோ. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார்

முன்னுரை:

1). தன் அப்பா ஈசாக்கினிடத்திற்கு திரும்பி வந்தபிறகு யாக்கோபு தொடர்ந்து பட்சபாதமாக நடந்து, தன் பிள்ளைகள் மனைவிகளினிடத்தில் வருத்தம் ஏற்படுத்தி, தனக்காகவே குழப்பம் உண்டாக்கினான்.

2). ராகேல் பெஞ்சமினைப் பெறும்போது தேவனானவர் ராகேலை யாக்கோபினிடத்திலிருந்து எடுத்தாலும் அவள் முதலில் பெற்ற யோசேப்பை மற்ற எல்லா பிள்ளைகளைவிட யாக்கோபு நேசித்தான்.

3). அவன் யோசேப்புக்கு ஒரு அங்கியைக் கொடுத்தான். இந்த நிகழ்ச்சி தன் அண்ணன்கள் யோசேப்பை பகைக்கத் தூண்டினது.

I. தேவனானவரோ வரப்போகிற நிகழ்ச்சிகளை சொப்பனத்தில் யோசேப்புக்குத் தெரிவித்தார்; யாக்கோபு உருவங்களை சரியாக விளக்கினாலும் அவனுடைய அண்ணன்கள் மற்றும் பெற்றோர் அந்தக் கனவுகளை நம்பவேயில்லை, ஆதி. 37:3-5, 9-11.

அ. பத்து சகோதரர்களும் அவர்களுடைய மந்தைகளை சீகேம் என்னும் ஊரண்டை கொண்டுபோனார்கள். எல்லாம் சரியா இல்லையா என்பதைப்பார்க்க யோசேப்பை இஸ்ரவேல் அனுப்பினார்.

ஆ. யோசேப்பின் வருகையைப் பார்த்து அவன் அண்ணன்கள் அவனைக்கொல்ல திட்டமிட்டாலும் ரூபன் அதை எதிர்த்தான். அவர்கள் அவனுடைய விசேஷமான அங்கியை எடுத்து, அவனைக் குழியில் போட்டார்கள்.

இ. ரூபன் வெளியே போகையில் அவர்கள் யோசேப்பைக் கொன்றுவிடுவதைவிட அடிமையாக விற்றுவிடலாம் என்று யூதா ஆலோசித்தான். அப்படியே எகிப்துக்குப் போகும் மீதியானியரின் இடத்தில் யோசேப்பை விற்றார்கள், ஆதி. 37:14, 18-28.

ஈ. ரூபன் திரும்பிவந்த பிறகு அவர்கள் யோசேப்பின் அங்கியில் இரத்தம் ஊற்றி அதை தங்கள் அப்பாவிற்குக் காட்டி இதை நாங்கள் கண்டுபிடித்தோம் என்று சொல்ல திட்டமிட்டார்கள்.

உ. யாக்கோபு அந்த அங்கியை அறிந்து தன் துணிகளைக் கிழித்துக்கொண்டு, யோசேப்புக்காக துயரம் அடைந்து ஆறுதலை மறுதலித்து, தொடர்ந்து துக்கம் கொண்டாடினான்.

II. **யாக்கோபுக்கு அறியாமல் எகிப்தின் ஒரு அதிகாரி போர்த்திபார் என்பவன் யோசேப்பை விலைக்கு வாங்கினான், ஆதி. 37:29-36.**

அ. யோசேப்பு அந்த அதிகாரியினிடத்தில் தயவு பெற்றான். யோசேப்பின் சேவைக்காக போர்த்திபார் என்பவன் அவன்மேல் பிரியமாய் இருந்ததற்காக தன் முழு வீட்டின்மேல் அவனை விசாரணைக்காரனாக்கினான். யோசேப்பின் நிமித்தமாக தேவனானவர் அந்த வீட்டாரை ஆசீர்வதித்தார், ஆதி. 39:1-6.

ஆ. ஆனால், போத்திபாரின் மனைவி யோசேப்பை தன் காதலனாக்க விரும்பினாள். அவன் அவளை மறுதலித்தபோது, அவன் அவளைக் கெடுக்க முயற்சித்தான் என்று பொய்யான குற்றம் சாட்டினாள்.

இ. இதைக் கேள்விப்பட்ட போத்திப்பார் கடுங்கோபம் அடைந்து ராஜாவின் சிறைச்சாலையில் யோசேப்பை அடைத்தான். நீதிமானாக நம்பத்தக்கவனாக நடப்பது நம்மை எப்பொழுதும் வலியிலிருந்தும் சோதனையிலிருந்தும் காப்பாற்றவில்லையே.

ஈ. சிறைச்சாலைக்காரனுடைய கண்களில் தேவனானவர் யோசேப்புக்கு தயவு கொடுத்ததினால் அவன் யோசப்பை முழு சிறைச்சாலையின்மேல் விசாரணைக்காரன் ஆக்கினான். யோசேப்பின் எல்லா வேலைகள் முன்னேற்றம் அடையும்படி தேவன் ஆசீர்வதித்தார், ஆதி. 39:7-23.

III. **அப்பொழுது ராஜாவின் பானபாத்திரக்காரனுக்கும், ரொட்டி சுடுபவனுக்கும் தேவனானவர் கனவுகளைக் கொடுத்தார். யோசேப்போ அவைகளின் அர்த்தத்தை வெளிப்படுத்தினான்.**

அ. யோசேப்பு சொன்னபடி மூன்று நாட்களில் பார்வோன் அந்த பானபாத்திரக் காரனுடைய ஸ்தானத்தில் அவனை புதுப்பித்து, ரொட்டி சுடுகிறவனை தூக்கிலிட்டான், அப்படியே நடந்தது, ஆதி. 40:1-32.

ஆ. அதன் பின்பு பார்வோன் இரண்டு விசித்திரமான கனவுகளை கண்டான். அதைக் கேட்டு பானபாத்திரக்காரன் யோசேப்பைப்பற்றி பார்வோனுக்குத் தெரிவித்தான்.

இ. யோசேப்பு கொண்டுவரப்பட்டான்: அந்தக் கனவுகளின் அர்த்தத்தை வெளிப்படுத்தினான். ஏழு வருஷங்களாக ஏராளமான அறுப்புகாலத்திற்குப் பிறகு ஏழு வருஷமாக பஞ்சம் இருக்கும் என்றான். நல்ல விளைச்சல் இருக்குபோது அவர்கள் தானியத்தை சேமிக்கவேண்டும்; அப்பொழுது பஞ்சத்தில் அவர்களுக்கு உணவு இருக்கும். யோசேப்பின் ஞானத்தினால் பார்வோன் ஆச்சரியப்பட்டு அவனை முழு எகிப்தின்மேல் இரண்டாவது அதிகாரியாக்கினான், ஆதி. 41:1-40.

ஈ. ஏழு வருஷங்களாக நல்ல விளைச்சல் வந்த பிறகு ஏழு வருஷங்களாக பஞ்சம் வந்தது. கானான் தேசத்திலும்கூட பஞ்சம் இருந்தது, ஆதி. 41 : 57. எகிப்தில் தானியம் உண்டு என்று

கேள்விப்படும்போது, அதை சம்பாதிக்க யாக்கோபு தன் பத்து குமாரர்களை அனுப்பினான். யோசேப்பே தானியத்தை அவர்களுக்கு விற்று, அவர்களுடைய தானிய மூட்டைகளில் அவர்களுடைய பணத்தைத் திரும்பிப் போட்டான்.

உ. இந்த நிகழ்ச்சி அவர்களிடத்திலே பெரிய கலக்கத்தை ஏற்படுத்தினது, ஆதி. 42: 1–28. அவர்கள் அந்த தானியத்தை சாப்பிட்டபிறகு இன்னும் அதிகம் சம்பாதிக்க போகும்படி யாக்கோபு அவர்களுக்குச் சொன்னான். ஆனாலும், அவர்களுக்கு தானியத்தை விற்ற மனிதன், அவர்கள் திரும்பி வரும்போது அவர்களுடைய கடைசி தம்பியை கட்டாயமாக கொண்டுவர வேண்டும் என்று சொன்னான் என்பதை யூதா தன் அப்பாவினிடத்தில் ஞாபகப்படுத்தினான். கடைசியாக அவர்களோடு பென்யமீனை எகிப்திற்கு அனுப்பலாம் என்று வருத்தத்தோடு யாக்கோபு ஏற்றுக்கொண்டான், ஆதி. 43:1–14.

IV. **அவர்களுக்கு தானியத்தை விற்ற பிறகு, யோசேப்பு அவர்களுடைய பணத்தை அவர்களுடைய மூட்டைகளில் போட்டு பென்யமீனுடைய மூட்டையில் தன் வெள்ளிக்கோப்பையை போட்டான்.**

அ. யோசேப்பினுடைய வீட்டு விசாரணைக்காரன் அவர்களைப் பின்பற்றி பெஞ்சமினுடைய மூட்டையில் கிண்ணத்தைக் கண்டுபிடித்தான். அவர்கள் எல்லோரும் திரும்பி யோசேப்பின் வீட்டிற்கு வந்தார்கள், ஆதி. 44:1–14.

ஆ. யூதா பெஞ்சமினுடைய மத்தியஸ்தராக பேசி, அவன் திரும்பிப் போகவில்லையானால் அவர்களுடைய அப்பா துக்கங்கொண்டாடினதினால் மரிப்பார் என்பதை வெளிப்படுத்தினான். யோசேப்பு துயரம் அடைந்து தன்னை தன் அண்ணன்களுக்கு வெளிப்படுத்தினான், ஆதி. 44 : 16 :34. ஆறுதலாக **பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார்** என்று யோசேப்பு தன்னை வெளிப்படுத்தினான், ஆதி. 45: 7.

இ. அப்பொழுது யோசேப்பு அவர்களை கவனிக்கும்படி அப்பாவாகிய யாக்கோபையும் அவருடைய முழு குடும்பத்தாரையும் எகிப்துக்குக் கொண்டுவந்தார். இப்படியாக தேவனானவர் யாக்கோபின் முழு குடும்பத்தாரை எகிப்திற்குக் கொண்டுவந்து, அங்கே அவர்கள் ஒரு பெரிய நாடாக ஆனார்கள்.

முடிவுரை:

1. தேவனானவர் இந்த எல்லா நிகழ்ச்சிகளையும் கட்டுப்படுத்தினார். அவர் மூத்தவன் இளையவனுக்கு சேவை செய்வான் என்று முன்கூறினார், ஆதி. 25 : 21– 23. ஆனாலும், தேவன் எப்பொழுதும் அந்தியை ஏற்றுக்கொள்ளமாட்டார்.

2. சூழ்ச்சியினால் ஈசாக்கினுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள ரெபெக்காளும் யாக்கோபும் திட்டமிட்டது பிரச்சனையை ஏற்படுத்தினது. அதனாலே, யாக்கோபு அந்த இடத்தை விட்டு வேறு தேசத்திற்கு ஓடிப்போக வேண்டியது.

3. கனவில் பரலோகத்திற்குப் போகும் ஒரு ஏணியை யாக்கோபு பார்த்தபிறகு விசுவாசத்தில் வளர்ந்தான், ஆதி. 28:11-17. கிறிஸ்துவானவர் (தன் மரணம் உயிர்த்தெழுதல் பரமேறுதலினால்) பரலோகத்திற்குப் போகும் அந்த ஏணியாய் இருக்கிறார் என்று வெளிப்படுத்தினார், யோவான் 1:51. இயேசுவானவர் யாக்கோபின் வித்தாய் இருக்கிறார், ஆதி. 28:13-14.

4. சிறந்த ஆடுகளைப் பெற்றுக்கொள்ள லாபான் யாக்கோபோடு போட்டிபோடும்போது, தேவனானவர் யாக்கோபுக்கு ஒரு சொப்பனத்தை கொடுத்தார், ஆதி 31:7-12. (5). யாக்கோபு ஏசாவோடு சமாதானத்தை ஏற்படுத்த வேண்டிய நேரத்தில்கூட தேவனானவர் யாக்கோபுக்கு உதவி செய்தார்.

5. யாக்கோபு தன் அப்பாவிடம் திரும்பி செல்லும்போது தேவனானவர் தூதர்களை அனுப்பினார். யாக்கோபுக்கு விரோதமான கசப்பைக் குறைக்கும்படி தேவனானவர் ஏசாவை செல்வத்தினால் ஆசீர்வதித்தாரா?

6. அப்பொழுது அவர்: உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார். ஆதி. 32:28.

7. யாக்கோபினுடைய பட்சபாதம் அவனுடைய பிள்ளைகளுக்குள்ளாக போராட்டங்களை ஏற்படுத்தினது. இதனால் யாக்கோபின் பத்து மூத்த மகன்கள் தன் தம்பி யோசேப்பைப் பகைத்தார்கள். ஆகையால், பெற்றோர் பிள்ளைகளை பாராபட்சமாக நடத்தக்கூடாது.

8. இப்படியாக தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார், ஆதி. 15: 13-16. தேவனானவர் இதை எப்படி செய்தார்? யாக்கோபு அடைந்த பிரச்சனைகள் அவர் முன்கூறினாரா? அல்லது அவருடைய நோக்கத்தை நிறைவேற்ற அவர்களுடைய பெலவீனங்களைப் பயன்படுத்தினாரா? நம்மால் சொல்ல முடியாது. ஆனால், ஒருகாரியம் நிச்சயமாய் இருக்கிறது: மனுஷர்கள் போராடினாலும் தேவனானவர் வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகிறார். ஆமென்!!

ஆவியின்படி நடந்தால் ஆக்கினைத் தீர்ப்பில்லை

Bro. பாண்டியன்

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக. பொதுவாக தண்டனைக்கு மனுஷர் பயப்படுவது வழக்கம். அதனால் தான் செய்கிற குற்றங்களுக்கேற்ப தண்டனைகளும், போலீஸ் ஸ்டேஷனிலும், சிறைச்சாலையிலும் வழங்கப்பட்டு முடிந்தவரை குற்றங்கள் நடக்காமல் தடுக்கப் பிரயாசப்படுகிறார்கள். ஆனால், தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு அதாவது சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினை கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் இருக்கிறது என்கிறது வேதம். சபையில் இருப்பவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்துள்ளனர். ஆனால், அவர்கள் ஆவியின்படி அதாவது கிறிஸ்து சொன்ன வசனத்தின்படி நடக்காமல் மாம்சத்தின்படி நடந்தால் ஆக்கினை உண்டு என்கிறார் பவுல் (ரோமர் 8:1) நல்ல கனி கொடாத மரமெல்லாம் அக்கினியிலே போடப்படும் என்றும், பிதாவின் சித்தத்தின்படி செய்யாதவன் பரலோகம் போக முடியாது என்றும் ஆண்டவர் மலைப் பிரசங்கத்தின் இறுதியில் எச்சரிக்கிறார்.

பொதுவாக சிலர் ஞானஸ்நானம் எடுத்து வாரம் தவறாமல் சபைக் கூடுதலில் கலந்து கொண்டால் போதும் என்று நினைக்கிறார்கள். ஆனால், நாம் ஆவியின்படி நடந்தால் தான் ஆக்கினைக்குத்தப்ப முடியும் என்று அப். உபதேசமும் வலியுறுத்துகிறது. நம் கடந்த கால பாவங்கள் ஞானஸ்நானத்தில் கழுவப்பட்டு நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருப்பது உண்மையே (ரோமர் 5:1) சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் புறஜாதிகளுக்குள்ளே நல் நடக்கை உள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள் என்று பேதுரு புத்திமதி சொல்லுகிறார் (1 பேதுரு 2:12) ஆக, நாம் எப்படி நடந்து கொள்வது என்ற வேத ஆலோசனைகள் சிலவற்றை தொடர்ந்து பார்ப்போம்.

முதலாவது, சத்தியத்தில் நடந்து கொள்ளுங்கள் : மூப்பனாகிய யோவான் தன் மூன்றாம் நிருபம் மூன்றாம் வசனத்தில் காயு என்பவனைக் குறித்துச் சொல்லும்போது, **சகோதரர் வந்து நீ சத்தியத்தில் நடந்துகொள்ளுகிறாய் என்று உன்னுடைய உண்மையைக் குறித்து சாட்சி கொடுத்தபோது மிகவும் சந்தோஷப்பட்டேன்** என்கிறார். சரி சத்தியத்தில் நடப்பது என்றால் என்ன ? யோவான் 8:31,32-ல், கிறிஸ்துவின் உபதேசமே சத்தியம் என்பதையும் அந்த சத்தியமே யூத ஜனங்களை பாவத்திலிருந்து விடுதலையாக்கும் என்றார். அவர்களுக்கு மாத்திரமல்ல சபையில் இன்றைக்கு இருக்கும் நம்மையும் கிறிஸ்துவின் உபதேசமே விடுதலையாக்குகிறது. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே

சத்தியம் என்று தேவனிடம் இயேசு ஜெபித்தார். அதனால் தான் அவரே, நான் சொல்லுகிற வசனமே ஆவியாயும், ஜீவனுமாயும் இருக்கிறது என்றார். ஆகவே, நாம் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி நடக்கும்போது தான் சத்தியத்தில் நடந்து கொள்கிறோம் என்பது தெளிவாகிறது.

இரண்டாவது, அன்பிலே நடந்து கொள்ளுங்கள் : (எபே. 5:1,2) கிறிஸ்து நமக்காக ஜீவனைத் தருமளவிற்கு அன்பு கூர்ந்தது போல நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள் என்கிறது வேதம். பொதுவாக அன்பு உலகத்தாரால் புகழப்பட்டாலும் நமது வேதத்தைப் போல யாரிடத்தில் எப்படி அன்பு கூரவேண்டும் என்ற தெளிவு எல்லாம் அதற்கு கிடையாது. அதனால் தான் உலகத்தில் தவறான உறவுகள், கள்ளக்காதல் போன்ற அசுத்தங்களும் நடக்கின்றன. வேதத்தின் படி ஒருவன் முதலாவது தேவனிடத்தில் அன்பு கூரவேண்டும். இதை நாம் சரியாகச் செய்யும் போது தவறுகள் எல்லாம் வர வாய்ப்பில்லை. இதற்கு இணையாக நம்மைப் போல பிறனையும் நேசிப்பது. நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பது இயேசுவின் புதிதானக் கட்டளையாகும். அன்பு குறையும்போது பகை உண்டாகிறது. தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியாக இருப்பதைக் கண்டு பொறாமையினால் கொலை செய்த காயீனைப் போல இருக்க வேண்டாம் என்றும், சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாய் இருக்கிறோம் என்பதையும் சிந்தித்து நடப்போம் (1 யோவான் 3:12,16). ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (எபே. 4:32).

ஆவியின்படி நடப்பதற்கு **மூன்றாவதாக ஒரு முக்கிய வேத ஆலோசனை : ஒளியிலே நடந்துகொள்ளுங்கள்** (1 யோவான் 1:7) தேவன் ஒளியில் இருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடே ஒருவர் ஐக்கியப்பட்டிருப்போம். நாம் ஆராதிக்கிற தேவன் ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், நமக்கு நன்மையான ஈவுகளை பரலோகத்திலிருந்து தரக்கூடிய சோதிகளின் பிதாவாக இருக்கிறார். நியாயப்பிரமாண அடிமைத்தனத்தில் இருந்த ஜனங்களுக்கு இயேசுவின் பிரசங்கம் பெரிய வெளிச்சமாக இருந்தது. அதை சரியாக விசுவாசியாத யூதர்களைப் பார்த்து இயேசு '**இன்னும் கொஞ்சகாலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும். இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளியில் நடவுங்கள்** (யோவான் 12:35) இயேசு உலகத்திற்கே ஒளியாய் இருக்கிறார். இருள் பாவத்தையும் ஒளி பரிசுத்தத்தையும் குறிக்கிறது. நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்கிறார் தேவன். ஆகவே, முற்காலத்தில் அந்தகாரமாயிருந்தீர்கள் இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள், வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் என்கிறார் பவுல். எபே. 5:8 அதனால் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தைத் தள்ளிவிட்டு நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.

இறுதியாக, கிறிஸ்து இயேசுவுக்குள் நடந்து கொள்ளுங்கள் : [கொலே. 2:6,7] நாம் இயேசுவை ஏற்றுக்கொண்டு சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டோம். தொடர்ந்து அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும். அவர் மேல் கட்டப்பட்டவர்களாகவும் அவருக்குள் நடந்து விசுவாசத்தில் பெருக வேண்டும். நாம் அறிந்தபடி ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாய் இருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின. கிறிஸ்து நம்மை பிரகாசிக்கச் செய்கிறவராய் இருக்கிறபடியால், நீங்கள் ஞானமுள்ளவர்கள் போல் கவனமாய் நடந்து கொள்ள வேண்டும் [எபே. 5:15] இயேசு அஞ்ஞானிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்கள் என்னத்தை உண்போம், குடிப்போம், உடுத்துவோம் என நாளைய தினத்தைப் பற்றிக் கவலைப்படுபவர்கள் என்கிறார். எனவே, நாம் கிறிஸ்துவுக்குள் நம்பிக்கையுள்ளவர்களாக வாழ அறிவுறுத்தப்படுகிறோம். வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்க வேண்டும். 1 பேதுரு 4:3 படி புறஜாதிகளுடைய இஷ்டபடி நடவாமல் அதாவது காமவிகாரம், துர் இச்சை, மதுபானம், அருவருப்புகளை அகற்றி புதிய வாழ்வை ஆரம்பித்திருக்கிறோம். கிறிஸ்துவுக்குள் நடக்கிற நம் நல்நடக்கை தேவனை மகிமைப்படுத்தும். பிரியமானவர்களே நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாக போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி இரக்கம் பெற்ற தேவ ஜனங்களாக கிறிஸ்துவுக்குள் நடந்து கொள்ளுவோம். அப்படி நாம் ஆவியின்படி நடந்து கொள்ளும் போது தான் நமக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.

மாம்ச சிந்தை மரணம், ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாய் இருக்கிறது. ஆபிரகாமிடம் தேவன் சொன்னது போல், நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு, உன்னைத் திரளாய் பெருகப்பண்ணுவேன் [ஆதி. 17:1,2] என்ற அதே தேவன் உங்களையும் ஆசீர்வதித்து பெருகச் செய்வாராக. ஆமென்!

தேவனை நம்பி, ஆசீர்வாதம் பெறுங்கள்

- **உங்கள்** முழு இருதயத்தோடு அவரை நம்புங்கள் (நீதி.27:9)
- **உங்கள்** வழிகளிலெல்லாம் அவரை நம்புங்கள் (சங். 127:1)
- அப்பொழுது, **உங்கள்** வழிகளைச் செம்மைபடுத்தி நடத்துவார் (சங்.23;ரோமர் 8:28)

ஒருவனும் உன்னை அசட்டை பண்ணை...

சகோ. K.M. பிலிப்

அன்பான வாசகர்களே ! யாவருக்கும் இரட்சகர் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். உயிரினங்களில் மனித இனம் மட்டுமே தன்மானத்தோடு வாழ விரும்புகிறான். பவுலும் கூட இதற்கு முக்கியத்துவம் கொடுத்து தீத்துவுக்கு எழுதும் பொழுது, **ஒருவனும் உன்னை அசட்டை பண்ண இடம் கொடாதிருப்பாயாக**, என்று அறிவுரை சொல்வதைப் பார்க்கிறோம் (தீத்து 2:15). இதில் அசட்டை என்றால் என்ன? ஏன் ஏற்படுகிறது? அது நம்மை எவ்விதம் தாக்குகிறது? அதன் விளைவு என்ன ? இதிலிருந்து தப்பித்துக்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும் ? என்பதை சற்று கூர்ந்து கவனிப்போம்.

அசட்டை என்றால் ஒருவரை அலட்சியப்படுத்துதல்; அற்பமாய் எண்ணுதல்; மதியாதிருத்தல்; கனவீனப்படுத்துதல் மொத்தத்தில் தன்மானத்தை இழக்கச் செய்தல். பொதுவாக நாம் ஒன்றைச் சொல்லி அதன்படி செய்யாமலிருந்தாலோ, அல்லது சொல் ஒன்றும் செயல் வேறொன்றுமாய் இருந்தாலோ நாம் பிறரால் அசட்டை பண்ணப்படுவோம். **இவனெல்லாம் ஒரு மனுஷனா?** என்று இகழப்படுவோம். அதிலும் கிறிஸ்தவர்களாகிய நம்மைப் பார்த்து, **இவனெல்லாம் ஒரு கிறிஸ்தவனா?** என்றால் நம்மால் உண்மைக் கிறிஸ்தவர்களும் அசட்டை செய்யப்படுகிறார்கள். மேலும், கிறிஸ்துவின் நாமம் தூஷிக்கப்படுகிறது. தேவ நாமம் அசட்டை செய்யப்படுகிறது. அன்பான கிறிஸ்தவரே ! யோசிக்கிறீர்களா ? இப்படிப்பட்டவர்கள் வாழும் பகுதியில் சுவிசேஷம் பிரசங்கிக்க முடியுமா? இந்த நிலைக்கு நீங்கள் காரணமாயிருக்கிறீர்களா? ஆகவே தான், **ஒருவனும் உன்னை அசட்டை பண்ண இடம் கொடாதிருப்பாயாக** என்று வேதம் கடுமையாக எச்சரிக்கிறது.

இதற்கு நாம் செய்ய வேண்டியதை ஆவியானவர் சொல்வதை கவனியுங்கள். **உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு** (வெளி. 3:11) **எனக்கென்ன இருக்கிறது** என்கிறீர்களா? பிரியமான கிறிஸ்தவரே ! நாம் பற்றிக் கொள்ளும்படி தேவன் கொடுத்த மாபெரும் ஈவாகிய **இரட்சிப்பு** உள்ளது. இந்த இரட்சிப்பின் மூலம் கிறிஸ்துவின் இரத்தத்தால் சம்பாதித்த சபையைப் பெற்றுள்ளோம். சபையில் தொடர, பரிசுத்தமாய் வாழ்ந்து நித்தியத்தை சுதந்தரித்துக் கொள்ள தேவையான தேவ ஆலோசனைகள் அடங்கிய பரிசுத்த வேதாகமத்தைப் பெற்றுள்ளோம். பிதாவாகிய தேவனாலும், குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவினாலும் கிருபையையும், சமாதானத்தையும் பெற்றுள்ளோம். பூமியில் வாழும் நாட்களெல்லாம் நன்மையும், கிருபையும் நம்மை தொடரும்படியான வாழ்க்கையைப் பெற்றுள்ளோம். எல்லாவற்றிற்கும் மேலாக **கிறிஸ்தவர்**

என்ற மேலான நாமத்தைப் பெற்றுள்ளோம். இப்படி நம் தன்மானத்தை காக்கவும், கனப்படுத்தவும் நம்மிடம் உள்ளவைகளாய் நாம் பெற்றுக் கொண்டவைகளை பற்றிக் கொண்டிருப்போமானால் நம்மை ஒருவரும் அசட்டை செய்ய முடியாது.

அந்தியோகியா பட்டணத்தில் சபையில் கர்த்தரால் சேர்க்கப்பட்ட விசுவாசிகளின் ஏறக்குரைய ஒரு வருட கால வாழ்க்கையை உற்று கவனித்தவர்கள் இவர்களை **கிறிஸ்தவர்கள்** என்ற புதிய நாமத்தை தரித்து கனப்படுத்தினார்கள் [அப். 11:26]. ஆம் அவர்களைப் பார்த்தவர்கள் அவர்களுக்குள் கிறிஸ்துவை பார்த்தார்கள். கிறிஸ்துவின் அன்பை, பண்பை, தியாகத்தை, நற்கிரியைகளின் பிரதிபலிப்பை கண்டார்கள். கிறிஸ்து அவர்கள் என்று புரிந்து கொண்டார்கள். கிறிஸ்தவர்களாகிய நம்முடைய வாழ்க்கையும் இப்படி இருந்தால் நம்மை ஒருவரும் அசட்டை செய்ய மாட்டார்கள்.

இத்தகு வாழ்க்கையைத்தான், **புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயிரு** [1 தீமோ.3:7] என்றும், **நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பி** [தீத்து 2:7] என்றும் பவுலடியார் வலியுறுத்துகிறார்.

அப். 10 –ல், ஒரு சரித்திரத்தை கவனிப்போம். கொர்நேலியு என்பவர் பேதுரு தன் வீட்டிற்கு வருவதை அறிந்து அநேகரை அழைப்பித்து காத்திருந்தான். பேதுரு மூலம் நற்செய்தியைக் கேட்ட அவர்கள் எல்லோரும் இரட்சிக்கப்பட்டார்கள். இந்த அநேகர் இரட்சிக்கப்பட கொர்நேலியுவின் அழைப்பை ஏற்று வரக்காரணம், 'அவன் [கொர்நேலியு] தேவ பக்தியுள்ளவனும், **தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான்** [அப். 10:2] என்ற இந்த முன்மாதிரியான வாழ்க்கைதான் அநேகரை இழுத்து வந்தது. ஆம் நாம் விதைக்க வேண்டியதை விதைத்தால் அறுக்க வேண்டிய நலமானதை அறுப்போம். இந்த அநேகர் கொர்நேலியுவை தங்கள் வாழ்நாளில் ஒருபோதும் அசட்டை செய்திருக்கவே மாட்டார்கள். இதுவே நம் நடைமுறை வாழ்க்கையாக இருக்கட்டும்.

அன்பானவர்களே ! புறம்பானவர்களை அசட்டை செய்து புறக்கனிக்க வேண்டாம். அவர்களிடம் அன்பை விதைப்போம். அவர்களிடமிருந்து பாசத்தை, நேசத்தை, பரிவை, பிரியத்தை அறுப்போம். அன்பு அசட்டையை அகற்றி விடும். இதைத்தான் இயேசு, **உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக** என்றார் [மத். 22:39]. இது பிறரையும் இரட்சிப்புக்குள் வழிநடத்தும். கிறிஸ்தவம் ஒரு சிலரால் அசட்டை செய்யப்பட்டாலும் உலகமெங்கும் உயர்ந்து நிற்கிறதென்றால் இயேசுவால் வெளிப்படுத்தப்பட்ட இந்த அன்பு தான் காரணமாகும். இதை மத்தேயு

5:44 –ல் தெளிவுபடுத்துகிறார். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை **நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்** என்று உபதேசித்தார். உபதேசித்தது மட்டுமல்ல வாழ்ந்து காட்டினார். ஆம் தனக்கெதிராய் தன்னை நிந்தித்த, குற்றம் சாட்டிய அசட்டை செய்து முகத்தில் காறித்துப்பிய, காயப்படுத்திய, சாட்டையால் அடித்த, முடிவாக அவர்களில் கால்களில் ஆணிகள் அடித்து சிலுவையில் தொங்கவிட்ட அந்த பாதகர்களை சபித்தாரா ? வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களை பட்சிக்கும்படி ஜெபித்தாரா? அல்ல; மாறாக தன்னை நிந்தித்தவர்களுக்காக, துன்பப்படுத்தினவர்களுக்காக **பிதாவே ! இவர்களை மன்னியும்** என்று அவர்கள் மேல் தன் அன்பை வெளிப்படுத்தி ஜெபித்தார் [லூக்கா 23:34]; அன்பை விதைத்தார். அந்த அன்புதான் இன்றும் அநேக ஆத்துமாக்களை அறுவடை செய்து வருகிறது. இன்னும் உலகம் உள்ளளவும் அறுவடை செய்யும்.

பிரியமானவர்களே ! நம் வாழ்க்கை நடைமுறை இப்படி முன்மாதிரியாய் இருக்குமானால் அது நம் குடும்பத்தை, உறவுகளை, நண்பர்களை இரட்சிப்புக்குள் இழுத்து வரும். போதனை இன்றி ஆதாயப்படுத்துவோம். தொடர்ந்து தாழ்மையை விதைத்து கனத்தை, களிப்பை, உயர்வை அறுவடை செய்வோம். நன்மையை விதைப்போம். கர்த்தரை நம்பி நன்மை செய்வோம். என்றென்றைக்கும் நிலைத்திருப்போம் [சங். 37:3]. யோசேப்பு அநியாயமாய் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான். இதனால் அவன் மனம் நொந்து, துக்கத்தில் மூழ்கிவிட்டானா ? மாறாக மற்றவர்களிடம் '**உங்கள் முகம் துக்கமுகமாயிருப்பது என்ன ?** என்று [ஆதி. 40:7] விசாரித்து ஆறுதல் படுத்தி தன்னால் இயன்ற நன்மைகளைச் செய்தான். ஒருவேளை மனுஷன் செய்த நன்மைகளை மறக்கலாம். ஆனால், தேவனோ யோசேப்பை ஏற்ற வேளையில் ராஜாவுக்கு முன் நிறுத்தி அடிமையை கைதியை அதிபதியாக உயர்த்தினார். தொடர்ந்து யோசேப்பு தன் வாழ்நாளில் நன்மைகளையே அறுவடை செய்தான். அசட்டை அகன்று போனது.

நாம் எப்பொழுது அசட்டை பண்ணப்படுகிறோம் ? இடம் கொடுக்கும் பொழுது தான் [தீத்து 2:15]. நம் இருதயமாகிய சிம்மாசனத்தில் பாவமான அநேக காரியங்களுக்கு இடம் கொடுத்து அமரச்செய்திருக்கிறோம் [கலா. 5:19–21]. இவைகள் நமக்குள் இருக்கும் வரை அசட்டையை ஒருபோதும் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது. இதைக் குறித்து நம் இருதயமே நம்மை குற்றவாளியாகத்தீர்க்கும் [1 யோ. 3:20,21] ஞானி சொல்கிறார். **ஞானவான்கள் கனத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள், மதிகேடரோ கனவீனத்தை அடைவார்கள்** [நீதி. 3:35]. நாம் யாராயிருக்கிறோம் ?

கர்த்தருக்கு பயப்படும் ஞானவான்கள் அல்லவா. இது உண்மையென்றால் நம்மில் உள்ள பாவமான நம்மை அசட்டைக்குள்ளாக்குகிற அனைத்தையும் தூக்கி வெளியே எறிவோம். பதிலாக நம்மை கணப்படுத்துகிற **அன்பு**, **சந்தோஷம்**, **சமாதானம்**, **நீடிய பொறுமை**, **தயவு**, **நற்குணம்**, **விசுவாசம்**, **சாந்தம்**, **இச்சையடக்கம்** இத்தகு பண்புகளால் நம் இருதயத்தை நிரப்புவோம் [கலா. 5:22இ23]. இப்பண்புகள் நம்மை கிறிஸ்தவர்கள் என்று உயர்த்திப் பிடிக்கும். அசட்டை நெருங்காது.

மேலும், ஆவிக்குரிய காரியத்தில் கவனமாயிருப்பதோடு மாம்சத்திற்குரிய காரியத்திலும் மிஞ்சி எண்ணாமல் உனக்குள்ளதை பற்றிக் கொண்டிருக்க வேண்டும். போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம். நாம் மற்றவர்களைப் பார்த்து சூடு போட்டுக் கொள்ள கூடாது. அதற்காக முயற்சியோ உழைப்போ கூடாது என்பதல்ல. ஆதாம் ஏவாளை தேவன் மனுஷர்களாயிருப்பதற்கே படைத்தார். மாறாக தேவ தூதர்கள் ஆக ஆசைப்பட்டார்கள். தேவ சாயலை இழந்து போனார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேறாயிருக்கிறது.... நாம் அனுபவிப்பதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்கு சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வையுங்கள் [1 தீமோ. 6:6,10,17]. அசட்டை நம்மை அசைக்க முடியாது. இந்த ஜெபத்தை நீங்களும் கருத்தாய் ஜெபியுங்கள் [நீதி. 30:7,8,9].

நிறைவாக நாம் யாரை எதை அசட்டை செய்கிறோம் என்பதை எச்சரிக்கையாய் கவனிங்கள். **திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான்.** [நீதி.13:13]. தீர்க்கதரிசி ஏலியின் பிள்ளைகள் கர்த்தருடைய கட்டளைகளை மீறி அசட்டை செய்ததால் வாழ வேண்டிய வயதில் ஒரே நாளில் இருவரும் வாழ்க்கையை இழந்தார்கள். இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டும் கீழ்ப்படியாமல் அசட்டை செய்த யூதாஸ் நான்று கொண்டு செத்தான். திருவசனத்தை கனப்படுத்திய அப்போஸ்தலர்கள் இன்றுவரை உலகமெங்கும் உயர்த்தி கனப்படுத்தப் படுகிறார்கள். பிரியமானவர்களே! ஒரே ஒரு திருவசனத்தை உங்கள் முன் வைக்கிறேன். **சபை கூடி வருதலை சிலர் விட்டு விடுகிறது போல நாம் விட்டு விடாமல்...** எபி. 10:25. இதில் நம் நிலை என்ன ?. 52– வாரம் தவறாமல் செல்கிறோமா ? முடிந்தால், வாய்ப்பு கிடைத்தால் மட்டுமா ? அதிலும் முழுமையாய் கலந்து கொள்கிறோமா ? மேற்கண்ட திருவசனம் யாருடையது ?

அப்படியென்றால் சபை கூடி வருதலை விட்டு விடுவதும் ஒழுங்கற்ற நிலையில் கூடிவருவதும் நாம் பிதாவாகிய தேவனையும் குமாரனாகிய கிறிஸ்துவையும் அசட்டை செய்வதாகும் என்பதை உணருகிறீர்களா?

அன்பான தேவ ஜனமே ! மற்றவர்கள் அசட்டை செய்வது

இருக்கட்டும். பரலோகம் நம்மை அசட்டை செய்தால் நம் நிலை என்ன? **அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல்... கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய் சமாதானத்தோடே அவர் சந்நதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருப்போம்** [1 யோ. 2:28; 2 பேதுரு 3:14] திருவசனத்தின்படி நாம் செய்ய வேண்டியதை செய்தால் தேவன் செய்ய வேண்டியதை சரியாய் செய்வார். **தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார் ? தேவனே அவர்களை (நம்மை) நீதிமான்களாக்கியிருக்கிறார்** [ரோமர் 8:33]. நாம் ஒருபோதும் அசட்டை செய்யப்பட மாட்டோம். தேவனே நம்மை கனப்படுத்துவார். ஆமென்!!

வளரும் கிறிஸ்தவனின் குணாதிசயங்கள்

- **வளரும் கிறிஸ்தவன்** *எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுவான் (ரோமர் 12:17)*
- **வளரும் கிறிஸ்தவன்** *எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருப்பான் (ரோமர் 12:18)*
- **வளரும் கிறிஸ்தவன்** *பழிவாங்குதலில் ஈடுபடமாட்டான் (ரோமர் 12:19)*
- **வளரும் கிறிஸ்தவன்** *தீமைக்குப் பதிலாக நன்மையையே செய்வான். (ரோமர் 12:21)*

ஞானஸ்நானத்திற்குப் பிறகு இவைகளை நினைவில் கொள்ளுங்கள்

- **நீங்கள்** கடந்த கால பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் (அப்போஸ்தலர் 2:38)
- **நீங்கள்** புதுசிருஷ்டிகளாயிருக்கிறீர்கள் (II கொரிந்தியர் 5:17)
- **நீங்கள்** கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருக்கிறீர்கள் (I பேதுரு 2:8)
- **நீங்கள்** எல்லாவற்றைப் பார்க்கிலும் கிறிஸ்துவை அதிகம் நேசிக்க வேண்டியவர்களாயிருக்கிறீர்கள் (மத்தேயு 23:27)
- **நீங்கள்** மற்றவர்கள் இரட்சிக்கப்பட உதவி செய்ய வேண்டியவர்களாயிருக்கிறீர்கள் (மத்தேயு 28:19, 20)

கடந்த 10, பிப்ரவரி – 2024 அன்று
காஞ்சிக்கோயிலில் நடந்த இலவச மருத்துவ முகாமின்போது...

World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Saturday 6.30 - 7.00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7.30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday (7:00 - 7:30) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026

"Registered" with RNI No: TNTAM/2006/20466
Postal regn. No. Erode/26/2024 - 2026
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2024 - 2026
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

எங்களது இதர வெளியீடுகள்

சத்தியத்தின் குரல்
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு
பணம் அனுப்பி
இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.



வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்
ஒரு புதிய அத்தியாயம்
- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.
ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.
விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு . இந்தியா.

To:

திருமறை தியானம்
நம்பிக்கை தொலைக்காட்சியில்
செவ்வாய் காலை 6:30 - 7:00 மணி
வெள்ளி காலை 6:30 - 7:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.